**OS.No.836/2024 P.W.1-லட்சுமி 31.07.2026**

<u>2வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சொத்தில் பாதி பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1979-ல் வழக்கு சொத்தை என் கணவர் கிரயம் வாங்கினார் என்றால் இருவரும் சேர்ந்து வாங்கினோம். 1979-ல் வாங்கப்பட்ட சொத்தின் ஆவணம் வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிருஜ்ணன் என் கணவர் என்றால் சரிதான். எனக்கு 2 மகன்கள், 2 மகள்கள் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி என்னுடைய முதல் மகனின் மகனாவார். 3வது பிரதிவாதி என்னுடைய 2வது மகன் செந்தில்குமாரின் மகன் என்றால் சரிதான். நான் ஆரம்பத்தில் சென்னை நகராட்சியில் மேலாளராக இருந்தேன்.

2. என் கணவர் ஸ்டேட் பேங்கில் பணியில் இருந்தார். தாவா சொத்தில் வீடு மற்றும் கடைகள் உள்ளதா என்றால் உள்ளது. என் முதல் மகன் சரவணகுமார் இறந்து போய் விட்டார். 2வது பிரதிவாதி தற்போது உரிமை வயதை எட்டிவிட்டார். என் முதல் மகனுக்கு மற்றொரு மகள் உள்ளார், அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் என் முதல் மகன் இறந்த பிறகு 2 மற்றும் 3வது பிரதிவாதிகளுக்கு என் கணவர் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாமல் எழுதி வைத்துவிட்டார். மேற்படி செட்டில்மெண்ட் தொடர்பான விவரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் 1 1/2 வருடத்திற்கு முன்னதாக தெரியவந்தது.

3. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் கணவர் வாங்கிய முழு சொத்தை ஏ அட்டவணை சொத்தாகவும், அதை இரண்டு பகுதிகளாக பிரித்து பி அட்டவணை சொத்தை 2ம் பிரதிவாதிக்கும், சி அட்டவணை சொத்தை 3ம் பிரதிவாதிக்கும் எழுதி வைத்துள்ளார் என்றால் அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. மேற்படி சொத்திற்கு எந்த காலத்திலும், என் பெயரில் பட்டாவோ, வருவாய் ஆவணங்களோ இருந்ததில்லை என்றால் குடும்ப தலைவன் என்ற முறையில் அவர் பெயரில் சொத்து வாங்கி எழுதி வைத்திருந்தேன். எனக்கு தெரியாமல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்று என் கணவர் பெயரில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

4. என் கணவர் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று வருவாய் கோட்டாட்சியரிடம் புகார் அளித்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் விசாரணையில் நானும் ஆஜரானேன். அந்த புகாரில் தனக்கு பாத்தியப்பட்ட சுய சம்பாத்திய சொத்து என்று சொல்லியுள்ளார் என்றால் அவர் சுயசம்பாத்திய சொத்து என்று சொல்லியிருக்க மாட்டார், எழுதிக் கொடுத்ததாக தான் சொல்லியிருப்பார். அந்த புகாரில் என்னையும் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் அந்த சொத்து எனக்கும் பாத்தியப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வருவாய் கோட்டாட்சியரிடம் 1வது பிரதிவாதி கொடுத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

5. 05.03.2026 அன்று மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் அளித்த புகார் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது தொடர்பாக எனக்கு எதுவும் கடிதம் வரவில்லை. அதன் பேரில் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த மேல்முறையீடு 26.05.2026 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது தொடர்பாக எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. கிருஷ்ணனின் சுயசம்பாத்திய சொத்து என்பதாலும், செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய முடியாது, மேலும் விதவை மற்றும் இளவர் நலனுக்காக எழுதி வைக்கப்பட்டதால் மேற்படி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

6. 2வது மகனும், அவருடைய வாரிசுகளும் என்னோடு தான் வசிக்கிறார்கள். 2வது மகனின் வாரிசுகளுக்கும் சேர்த்து தான் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் 2வது மகனும் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் ஆஜராகி அவருடைய மகனுக்கு வரவேண்டிய சொத்தை பொறுத்து ரத்து செய்வதில் ஆட்சேபனை இல்லை என்று மனு கொடுத்தார். தாவா சொத்து என் கணவருக்கு பாத்தியப்பட்ட சுயசம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய என் கணவர் வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான்.

7. நான், என் கணவர், எனது 2வது மகன் ஆகியோர்கள் சேர்ந்து 2வது பிரதிவாதி மைனருக்கு எழுதி கொடுத்த சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய வேண்டுமென்றால் என்

கணவா் தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும், எனக்கு மேற்படி சொத்தில் எந்த பாகமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எந்த வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தகுந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தி தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை